ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய ஸம்பந்நரான மாம்பலம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஆனிமீ 32உ (15-7-49) நித்ய விபூதிக்கு எழுந்தருளியது தென்னிந்தியா எங்கும் அறிந்ததே. இந்த ஸ்வாமி, 'கலௌ க²லு ப⁴விஷ்யந்தி நாராயண பராயணா:। க்வசித் க்வசித் மஹாபா⁴கா³ த்³ரமிடே³ஷு ச பூ⁴ரிஶ:' என்னும் மஹர்ஷி வசநப்படி, த்ரமிட தேசத்தில் சம்பகாரண்யமென ப்ரஸித்தமான மன்னார் கோவில் ஸமீபமுள்ளதும், வாஸுதேவ பராயணர் நிறைந்து நிறம்பெற்ற நிலமுமான நாகை என்னும் திவ்ய ஸ்தலத்தில் அவதரித்தவர். ஸ்வாமி "வாஸுதே³வஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது³ர்லப⁴:" என்று ஸ்வயம் தந்நாமகராகவும் தந்நிஷ்ட சித்தராகவு மிருந்தார். இந்த ஸ்வாமியின் குணவர்ணநத்துக்கு அடியேன் அஶக்தனாயிருந்தும், மனமாற்றுமையாலும் அந்த ஸ்வாமியின் வாத்ஸல்யம் பெற்றமையாலும் கிஞ்சித் எழுதத் துணிகின்றேன். ஸமீப காலமாக ஸாதுக்களின் பாக்யக் குறைவால் வரவர மார்க்க தர்ஶிகளாகவும் வ்யபதிஷ்டர்களாகவும் உள்ள பெரியோர்கள் இவ்வுலகை உபேக்ஷித்து லோகாந்தரம் எழுந்தருள்கின்றனர். அதனால் அஸாதாரணமானதொரு ஸத் ஸம்ப்ரதாய தீபம் அணைந்து, அந்தகார இருள் நம்மை அணைந்துகொள்கிறது. 'மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்³யததி ஸித்³த⁴யே। யததாமபி ஸித்³தா⁴நாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத:' எனக் கணக்கிடும்படி, இந்த ஸ்வாமி வெகு ஸஹஸ்ரத்தில் ஒருவர். நரகதுல்ய பூயிஷ்டமான நகரத்தை நாகமாக்கியவர் நாகை ஸ்வாமி; 'தே³ஹ நாகமஹிதம் நரகம் வத³ந்தே' என்று பரமபத துல்யமாக்கி ஆஸ்திக்யத்தை செழிக்கச் செய்தார். வானடுகந்த இந்த ஸ்வாமி சென்னை சென்றதால், சென்னை பகவத் பாகவத பரிக்ரஹீத மாயிற்று. ஸ்வாமி ஆபால்யம் ஆங்கில அப்யாஸ அறிவு படைத்து ஏற்றம் அடைந்தும், வடமொழி வன்மையும் வேதாந்த விஜ்ஞாந விஶேஷமும் வியக்கத்தக்க விதத்தில் பெற்றவர்; விஹித நித்யகர்மாநுஷ்டாந நிரதராய்ப் பூர்ண கல்பமாய் அநுஷ்டித்து வந்தவர். இவரிடம் உபதேஶங்களும் காலக்ஷேபங்களும் பெற்றவர் அநேகர்.

தாபத்ராயாக்ராந்தரான சென்னை ஆஸ்திகர்களுக்கு இந்த ஸ்வாமியின் தர்ஶநமே ஶாந்த்யௌஷதமா யிருந்தது. பெரியோர்களும் லௌகிக ப்ரமுகர்களும் விதேஶ மஹான்களும் அடிக்கடி ஸ்வாமியை அடைந்து வணங்கிப்போவதுண்டு. இவரை ஒருமுறை நெருங்கி வந்தித்தால் மனதுக்கு ஒரு ஶாந்தி பெறுவது அநுபவ ஸித்தம். வயஸ் தாரதம்ய மின்றி, தம்மை வந்து வணங்கினோர் சிறியர் சீரியர் வாசியற, பரஸ்பர ஶேஷத்வாநுஸந்தாநமான ஸ்ரீ வைஷ்ணவ உத்தம நிஷ்டையைக் கைக்கொண்டிருந்தார்.

சென்ற ஸாதாரண ஹூ (1911)ல் நம் ஸம்ப்ரதாயத்தின் ப்ரவசநார்த்தம் ஏற்பட்ட அஸாதாரண பத்ரிகையான வேதாந்த தீபிகைக்கு இந்த ஸ்வாமி முதல் பத்ராதிபராகவும், முதல்தர பத்ராதிபராகவும், ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபா கார்யதர்ஶியாகவும் இருந்து, அப்பத்ரிகையை நீடித்து நடத்தி வந்தார். இப்பொழுது ஸ்ரீ அழகிய சிங்கர் நியமந பூர்வம் வெளிவரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கும் இவரே ஆசிரியராக இருந்துவந்தார். சென்னை ஸ்ரீ ராமக்ருஷ்ண வித்யாலயாதிகளின் தத்கால ப்ரௌட ஸ்திதிக்கும் காரணம் இவரே. அந்த ஸ்தாபநங்களின் நிர்வாஹத்தையும் ஸமீப காலம் வரை ஏற்று அவற்றை வெகு சிறப்புடன் நடத்தி வந்தார். ஸ்ரீ அஹோபில மடத்தின் அதீநமான மதுராந்தக ஸம்ஸ்க்ருத கலாஶாலையையும் இவரே வெகு சதுரராய்ப் பராமரித்து வந்தார். அநந்ய ப்ரயோஜநராகவே எல்லா வ்யாபாரங்களையும் நிர்வஹித்துவந்த ஈடு செய்ய முடியாத இந்த வ்யக்தியைப் பிரிந்ததால் சென்னை ஒரு ஶோபையை இழந்துவிட்டது. பார்வைக்கு மட்டுமன்றி உண்மையிலும் இவர் ஒரு மஹர்ஷியும் ஆத்மார்த்த கர்மயோகியுமாய் விளங்கிவந்தார். ‘நிவ்ருத்த ராகஸ்ய க்ருஹம் தபோவநம்’ என்பதுபோல் நிராஶராயிருந்து, ‘ந சலதி நிஜவர்ணதர்மதோ ய:’ என ச்யுதியற்ற கர்மநிஷ்டராய் வர்த்தித்து வந்தார். உள்ளம் உரை செயல்களில் ஒருமித்த உத்தமர். க்யாதி லாப பூஜா விமுகர். மற்றுமுள்ள உத்தம புருஷ லக்ஷணங்களும் பொருந்திய இந்த ஸ்வாமியின் மறைவு உலகிற்கே பெருத்த நஷ்ட மென்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை.

* * * *

[சென்னை, தி. நகர், ஸ்ரீ. சாரதா வித்யாலயா உயர்தரக் கலாசாலாசிரியர்கள்.]

ஸ்ரீமான் ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி 1949ம் ஆண்டு ஜூலை மாதம் 15ந் தேதி வெள்ளிக்கிழமை யன்று சிறிது தேக அஸௌக்யமாக இருந்து, பின் இறைவன் திருவடி சேர்ந்தார். அப்பெரியாரின் மரணத்தால் நாங்கள் எம் தந்தையையும், உற்ற நண்பரையும், குருவையும், உற்ற துணைவரையும் இழந்தவராக ஆனோம். அப்பெரியார் ஏழை எளியவரின் உற்ற துணைவராக இருந்ததன்றி, அவரில் எவரும் கண் கலங்காவண்ணம் அவர்கட்குத் தம்மால் இயன்ற அளவு உதவி புரிந்து வந்தார்.

இப்பெரியாருடன் மிகவும் நெருங்கிப் பழகிப் பத்து வருடங்களுக்கு மேலாக அவர்கீழ் வேலை செய்துவந்தது எங்களது மஹத்தான பாக்யத்தின் பயனாகும். அம்மஹத்தான பாக்யம் எமக்குக் கிட்டியது பற்றி நாங்கள் மிகவும் பெருமிதம் அடைகின்றோம். சாந்தியையும் உயர்ந்த கருத்துக்களையும்

தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட பலரால் அவர் நேசிக்கப்பட்ட தன்றிப் பூஜிக்கவும் பட்டார்.

கம்பீரமான தேகமும், நீண்டு வளர்ந்த வெண்மையான தாடியும், பரந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸமயக் குறியீடான திருநாமம் விளங்குவதற் கேற்ற அளவு பரந்த நெற்றியு முடையராய், வ்யாஸர் வால்மீகி போன்ற முனிவர்க ளுக்கு ஸமானமானவராய், பார்த்த அளவில் ஒருவிதமான பயம் பக்தி இவற்றை உண்டாக்கும் செவ்விய உருவம் பொருந்திய மஹானே எமது அன்பிற்குகந்த தலைவராவர்.

இம் மஹர்ஷி ஆசிரியருக்கெல்லாம் ஆசிரியர்; ஆசிரியருள் முதன்மை யானவர். உண்மையான உழைப்பாளி. யாவரும் தமது வேலையில் கருத்தா யிருக்க வேண்டும் என்ற சீரிய கொள்கையைக் கைக்கொண்டவர். அவரே அதற்குத் தக்க சான்ருகவும் விளங்கினர். எம்முடன் கலந்துபேசும் பல அரிய ஸந்தர்ப்பங்களில், அவர் கடவுள் பக்தியைப் பற்றியும் அதன் முக்யத்வத்தைப் பற்றியும் எளிய நடையில் எமக்குப் போதித்து வந்தார். மதத்தை அடிப்படை யாகக் கொண்ட வாழ்க்கையைக் குறித்து வீணுக வாதிப்பதில் பயனில்லை யென்றும், நம் வாழ்க்கையை மதத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தி அதன் அவசியத்தை உணரவேண்டு மென்ற அரிய உண்மையை எமக்கு அவர் தமது உபந்யாஸங்களில் தெளிவாகப் போதித்து வந்தார். மதப்பற்றின் அவசியத்தைப் பற்றியும், பிற மதத்தினரின் அரிய கொள்கைகளை ஆதரிப் பதைப் பற்றியும் அவர் எமக்கு விரிவாக உணர்த்தியுள்ளார்.

ஸ்வாமி வாஸுதேவாசார்யரின் நிர்வாஹத் திறமை ஈடு மெடுப்பு மற்றது. அவரது ஒழுங்கும், ஆழ்ந்த படிப்பும், விஷயங்களின் பல சிக்கல்களை உடனுக் குடன் அறிந்துகொள்ளும் நுண்ணறிவும், ஒழுக்கத்தை நிலைநாட்டும் முறை களும், உபாத்யாயர் என்ற முறையில் அவரது பழுத்த அநுபவமும், இவற் றிற்கு மேலாக அவரது சீரிய நடத்தையும், சென்னை மாநகரில் ராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீ சாரதா வித்யாலயப் பள்ளியின் முன்னேற்றத்திற்கு அடிகோலின.

ஸ்வாமி வித்யாலயத்தின் மானேஜராக இருந்தபோது அவர் அதைத் தமது சொந்த வீடாகவும், அதில் உள்ளவர்களைத் தமது வீட்டைச் சேர்ந்தவர் கள் போலவும் பாவித்து வந்தார். வித்யாலயத்தை எவ்வித முறையில் உன்னத நிலைக்குக் கொண்டுவரலா மென்பதும், எவ்விதத்தில் அதை மிக்க பயனுள்ள தாகச் செய்யலா மென்பதுமே அவரது முக்ய குறிக்கோளாக அமைந்திருந்தன.

இத்தகைய அருங்குணம் வாய்ந்த மஹான் தமது மானேஜர் வேலையி லிருந்து ஓய்வு எடுத்துக்கொண்டு இன்னும் சரியாக இரண்டரை மாதங்கள் கூட நிரம்பவில்லை. இதன் நடுவில் அவர் எம்மைக் கன அந்தகாரத்தில் இருத்தி விட்டு மறைந்தார். உள்ளத்தில் திகிலையும் சோகத்தையும் கிளப்பிவிட்டு நந்தாவிளக்கு அணைந்தது. அவரது மறைவிற்கு நாங்கள் யாவரும் மிகவும் வருந்துகிறோம். இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட இந்த அபூர்வ

மானதும் மேன்மையானதுமான இந்த மலர்—இறைவனடி சேர்ந்த இப்புனித ஆன்மா—ஸ்ரீ ராமபிரானது பாத கமலங்களில் என்றென்றும் நிலைபெற்ற சாந்தியை அடைவதாக.

* * * * * *

ஸ்ரீ மானேஜர் ஸ்வாமியின் மறைவு

[ஈச்சம்பாடி. ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, M.A., L.T., ஆனரரி ப்ரின்ஸ்பால், ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத மஹா கலாசாலை, மதுராந்தகம்.]

ஸ்ரீமதஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகிய சிங்கரால் பரமோதார குணத்துடன், நமது ஸ்ரீ வைஷ்ணவச் சிறுவர்களை ஆத்மகுண பூரிதர்களாகவும் பண்டிதர்களாகவும் செய்வதற்காக மதுராந்தகத்தில் ஓர் உயர்ந்த வேத சாஸ்த்ர மஹா கலாசாலை ஸ்தாபிக்கும்படி நேர்ந்திருக்கிறது. ஸ்ரீமதழகிய சிங்கர் செய்தருளிய பல அரிய பெரிய கார்யங்களில் இது முதன்மையானது. இவ்வுயர்ந்த நோக்கத்திற்கு அநுகுணமாக இக்கலாசாலையின் முதல் அத்யக்ஷராக, காலம் சென்ற மஹா பண்டிதரும் ஆத்மகுண பூர்ணருமான ஸ்ரீ. உப. வித்வான் திருக்கோட்டியூர் ஸ்வாமியையும், கலாசாலா மானேஜராக, லௌகிக வைதிக ஸம்பத்துக்கள் நிறைந்த பண்டிதரும் ரிஷிதுல்யருமான ஸ்ரீ. உப. வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியையும் நியமிக்கும்படி யிருந்தது. இவ்விரண்டு ஸ்தானங்களுக்கும் முறையே, முதலில் ஸ்ரீமதழகிய சிங்கரால் நியமிக்கப்பட்ட இரண்டு ஸ்வாமிகள் த்விர மற்றொருவரைக் காண்பதரிது.

முதலில் அத்யக்ஷ பதவியை அலங்கரித்த ஸ்ரீ. உப. வித்வான் திருக்கோட்டியூர் ஸ்வாமி திடீரென்று மறைந்ததும், அந்த ஸ்தானத்திற்கு ஸிரந்தரமாகத் தகுந்த ஸ்வாமியை நியமிக்க முடியாமலேயே இருக்கிறது. அந்தத் துக்கமானது சிறிது சிறிதாக மறைந்துவரும் நாளில் திடீரென்று ஸ்ரீ. உப. மானேஜர் ஸ்வாமி மறைந்தது அடியோங்கள் போன்றவர்களின் தௌர்ப்பாக்யமே. ஸகல வித லௌகிக ஜ்ஞானத்துடன் வித்யாசாலைகளை நடத்துவதில் பாரங்கதரான அந்த ஸ்வாமியின் ஸ்தானத்தை பூர்த்திசெய்வது இனி முடியாது. லௌகிகம், வைதிகம், சாஸ்த்ரஜ்ஞானம், ஆத்மகுணம், ஸாமர்த்யம் முதலிய எல்லாக் குணங்களும் ஒருங்கே கூடிய அந்த ஸ்வாமிக்குத் துல்யராக மற்றொரு ஸ்வாமியை இதுவரை அடியேன் ஸேவித்துக்கொண்டது கிடையாது.

ஆங்கிரஸ வர்ஷம் சித்திரை௴ மாம்பலம் ராமஸ்வாமி தெருவில் ஒரு நாள் பிற்பகல், அடியேன் ஸ்ரீ மானேஜர் ஸ்வாமியை முதல் தடவையாக ஸந்தித்து ஸேவித்துக்கொண்டேன். அதற்குப் பிறகு மதுராந்தகம் கலாசாலையில் அடியேன் கைங்கர்யம் ஆரம்பித்த 1942௵ முதல் அந்த ஸ்வாமியினிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்தேன். அந்தக் காலம் முதல், அந்த ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளுவதற்கு முதல் நாள் ஸாயங்கால பர்யந்தம், ‘ அந்த ஸ்வாமியினிடம்

மிகவும் நெருங்கிப் பழகிய ஆப்தர்களுக்குள் அடியேனும் ஒருவன்' என்று அடியேன் மிகவும் பெருமையாகச் சொல்லிக்கொள்ள முடியும்.

ஸ்ரீ ராமக்ருஷ்ண ஸ்கூல் நிர்வாஹத்தில் அதிக ஊக்கம் காண்பித்து அத்விதீயர் என்று பெயர் வாங்கிய அந்த ஸ்வாமி, நமது கலாசாலை விஷயங்களில் அதைக்காட்டிலும் அதிக ஊக்கம் செலுத்தி வந்தார். அதை அடியேன் நன்கறிவேன். மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலை விஷயம் என்றால் அந்த ஸ்வாமி என்ன கார்யம் இருந்தபோதிலும் அதை உடனே நிறுத்திவிட்டு இக் கார்யத்தைக் கவனிப்பது வழக்கம். நமது கலாசாலை வித்யார்த்திகளிடமும் ப்ரவசந கர்த்தாக்களிடமும் ஸ்வாமிக்குள்ள ப்ரேமை அளவற்றது.

நிர்வாஹ விஷயங்களில் மிகவும் கண்டிப்பான முறைகளை அநுஸரிப்பவர் நம் ஸ்வாமி. கலாசாலா நியம விரோதம் செய்வோர் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் தகுந்த சிக்ஷை கொடுக்கவேண்டு மென்று ஸ்வாமி அடியேனிடம் பல தடவைகளில் ஸாதித்ததுண்டு. வித்யார்த்திகளின் போஜந விஷயமாக அவர்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுப்பதில் அதிகமான ஊக்கம் உண்டு அந்த ஸ்வாமிக்கு. திருமேனிக்கு எவ்வித ச்ரமம் ஏற்பட்டிருந்தாலும், கலாசாலா ஸம்பந்தமான கார்யம் என்றால், உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொடுக்க ஸ்வாமி தவறினதேயில்லை.

வார்ஷிகோத்ஸவங்களில் அந்த ஸ்வாமி மிகவும் உத்ஸாஹத்துடன், எவ்விதமான இடையூறுகள் ஏற்பட்டாலும் அவைகளைப் பொருட்படுத்தாமல், தம் திருமேனி ஸௌகர்யங்களையும் கவனித்துக்கொள்ளாமல் மதுராந்தகம் எழுந்தருளி, உத்ஸவங்களை மிகவும் விமர்சையாக நடத்திய பிறகு தான் அந்த ஸ்வாமியின் மனம் நிம்மதி யடையும்.

நமது கலாசாலைப் பாடதிட்டங்களை மாற்றி யமைத்து, பிற்காலத்தில் அவை வித்யார்த்திகளின் ஜீவநோபாயங்களுக்கு உதவும்படி ஏற்பாடு செய்ய வேண்டு மென்று சில திட்டங்களை அந்த ஸ்வாமி வகுத்திருந்தார். ஆனால் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அவைகளை அந்த ஸ்வாமியின் காலத்திலேயே பூர்த்தியாகும்படி அநுக்ரஹிக்கவில்லை. ஸ்ரீமதழகிய சிங்கர் வித்யார்த்திகளின் பிற் காலத்திய ஆத்ம சரீர போஷணார்த்தம் வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருவதும், இனி மேன்மேலும் இம்மாதிரி ப்ரகாரங்களினாலேயே ஸ்ரீ. உப. மானேஜர் ஸ்வாமியின் அபிலாஷை பூர்த்தியாகும் என எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீமந் நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்வதென்பது ஸ்வேச்சையினால் நாம் எடுத்துக்கொள்ளும் தொண்டானபடியால், பிறருக்கு ஸேவைபுரிவது என்ற ச்வவ்ருத்தியைப் போல் அது இராது. தன் னிஷ்டப்படி ஏற்றுக்கொண்ட கார்யம் கஷ்டமானதாக இருந்தாலும் இஷ்டாநுஸாரியாகவே அது த்ருப்தியைக் கொடுக்கும். ஆனால் இந்த ஸ்வாமி விஷயத்தில் நாமாகவே ஒரு கார்யத்தை இந்த ஸ்வாமியினிடத்தில் ஏற்றுக்கொள்ளாமல், ஸந்தர்ப்பங்களினால் இந்த ஸ்வாமியி னடியில் கைங்கர்யம்

189263

செய்ய நேர்ந்தாலுங்கூட அக்கைங்கர்யம் ஆஹ்லாதாவஹமாகவே இருக்கும். நமக்கு மிகவும் க்லேசத்தைக் கொடுக்கக்கூடிய கார்யமாக இருந்தாலும் கூட, இந்த ஸ்வாமியின் முன்னிலையில் அக்கார்யங்களையும் செய்தால் அதன் மூலமாக நமக்குப் பேரானந்தம் உண்டாகும்.

அந்த ஸ்வாமியிடம் உள்ள மேலான குணம் ஆசார்ய ப்ரதிபத்தி; தாமாக அநுஷ்டித்துக் காட்டி நமக்கும் ஆசார்ய பக்தி உண்டாகும்படி செய்பவர். ஸ்ரீஸ்வாமியின் மறைவுக்கு முதல் நாள் ஸாயங்காலம் அந்த ஸ்வாமியினிடம் அடியேன் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கும்பொழுது அந்த ஸ்வாமி "என் தேஹ ஸ்திதி ஸரியாக இல்லாமற் போனாலும் கூட ஸ்ரீமதழகிய சிங்கரின் நியமனத்தை ஶிரஸா வஹித்து நாளை பொறுத்து அவச்யம் மதுராந்தகம் போய்க் கலாசாலா கார்யங்களைக் கவனித்து வருவோம்" என்றிவ்வாறு ஸாதிக்கும்படி யிருந்தது. அந்த ஸ்வாமியின்கீழ்க் கைங்கர்யம் செய்யும் பாக்யம் கிடைத்தவர்கள் தந்யர்களே. இம் மாதிரியான பெரிய மஹானைத் தான் நமது கலாசாலைக்கும் மானேஜராக நியமிக்கவேண்டு மென்று ஸ்ரீமதழகிய சிங்கர் நன்கு அறிந்து அம்மாதிரியே நியமிக்கும்படி யிருந்தது. ஆனால் நமது தௌர்ப்பாக்ய வஶத்தால் இந்த ஸ்வாமி சீக்ரமாகவே நம்மை விட்டுப் பிரியும்படி நேர்ந்துவிட்டது. எவ்வளவு ப்ரலாபித்தும் பயன் என்ன? இந்த ஸ்வாமியின் மறைவு அடியேனுக்கு ஒரு பெரிய நஷ்டம் என்று அடியேன் கருதுகிறேன். இம்மாதிரியே ஒவ்வொருவரும் எண்ணலாம்.

ஸாதாரணமாய் இந்த ஸ்வாமியை அன்வர்த்த நாமாவாக ஸ்ரீமானேஜர் ஸ்வாமி என்றுதான் அடியோங்கள் வ்யவஹரிப்பது வழக்கம். அந்த ஸ்வாமி நம் மனத்தில் ஆழ்ந்து பதிந்துவிட்டார். இனி அத்திருவுருவத்தை நம் மனத்தை விட்டு விலக்க முடியாது. இதுவரை ஸ்தூல சரீரத்துடன் ஸேவை ஸாதித்த ஸ்ரீ ஸ்வாமி ஸூக்ஷ்ம ஸ்வரூபத்துடன் நம் மனத்தில் இருப்பிடம் கொண்டுவிட்டார்.

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், நமக்கு இந்த மானேஜர் ஸ்வாமியின் ஞாபகம் எக்காலத்திலும் இருந்து, நாம் க்ருதஜ்ஞர்களாகவே இருக்கும்படி அநுக்ரஹிக்கவேண்டும். ஸ்ரீவைகுண்டத்தில் முக்த ஸ்வரூபியாகிய இந்த ஸ்வாமியும் நம்மை (ஏற்கனவே ஏற்பட்ட பழக்கத்தால்) நற்கார்யங்களைச் சரிவரச் செய்து வரும்படி அநுக்ரஹிக்கவேண்டும்.

இந்த ஸ்வாமியிடம் நெருக்கிப் பழகி அவரது அநுக்ரஹத்திற்குப் பாத்ரமானவர்கள், தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்துவந்தால், அதுவே அவர்கள் அந்த ஸ்வாமிக்குச் செய்யவேண்டிய ஸேவையாகும்.

* * * * * *

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஸஹஸ்ர நாம ஸபா, தேரழுந்தூர்

ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் நிர்யாணம்.—தேரழுந்தூர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா கார்யஸ்தர்களும், அதன் கிளை ஸ்தாபநமான அத்யாபக-வேதபாராயண ஸமிதியின் நிர்வாஹஸ்தர்களும், மற்றும் பல பண்டிதர்களும் சேர்ந்த குழாம் ஒன்று, ஸ்ரீ மாம்பலம் ஸ்வாமி பரமபதித்த செய்தி கேட்டு, அவருக்கு மர்யாதை செலுத்தவும், அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளவும், 17—7—'49 அன்று, ஸ்ரீ. உப. K. கோபாலையங்கார் ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அக்கூட்டத்தில் பலர் ஸ்வாமியின் கல்யாண குணங்களைப் பற்றியும், கல்வித்துறையிலும் வைதிக லௌகிக ஸமுதாயங்களிலும் அவர் செய்துள்ள அரிய ஸேவைகளைப் பற்றியும், ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமநத்தை மேற்கொண்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகை, ஸ்ரீ மதுராந்தகம் சாஸ்த்ர பாடசாலை ஆகிய இவைகளைத் திறம்பட நடத்திவந்த தொண்டைப் பற்றியும் பரக்கப் பேசினார்கள். பின்னர் அக்ராஸந ஸ்வாமி ஷை விஷயங்களை வலியுறுத்தினதோடு, ஸ்ரீ மதுராந்தகம் கலாசாலை, சென்னை ராமக்ருஷ்ண கலாசாலை முதலிய ஸ்தாபநங்களை மிக உந்நத பதவிக்குக் கொணர்ந்த பெருமை அவரையே சார்ந்ததென்றும், ஸ்வாமியின் மறைவு ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கே பெருத்த நஷ்டமென்பதில் ஐயமில்லையென்றும் பேசி முடித்தார். அப்போது அக்கூட்டத்தில் அடியிற் கண்ட தீர்மாநம் ஏகமனதாய் நிறைவேறிற்று:—

> "ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய நிதியாய், உலக ஸமூஹத்துக்கே வைதிக மதத்தின் மேன்மையைத் தமது வாழ்நாளில் அநுஷ்டித்துக் காட்டிவந்த மாம்பலம் ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் பிரிவு மனத்தில் மிகுந்த துக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இக் கூட்டத்தார் தங்கள் அநுதாபத்தை இதன் மூலம் ஸ்வாமியின் குடும்பத்தார்க்கும் அவரது பந்து மித்ரர்கட்கும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்."

தேவஸ்தாந தர்ம கர்த்ருத்வம்.—தேரழுந்தூர் வாஸியும், குற்றாலம் ரைஸ் மில் உரிமையாளரும், ஸ்ரீ. வி. ஸ. ஸபையின் அத்யக்ஷருமான ஸ்ரீ. உப. டி. எஸ். ஸுந்தரமையங்கார் (B.A.,) ஸ்வாமியை ஸ்ரீ ஆமருவியப்பன் தேவஸ்தாநத்துக்கு 5-வருஷ காலம் தர்மகர்த்தாவாக இருக்கும்படி ஹிந்துமத ஸ்தாபந பரிபாலந போர்டார் நியமித்திருக்கிறார்கள். உதார குணமும் தர்ம சிந்தையும் வாய்ந்த இந்த ஸ்வாமி இக்கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டு, தமது குணங்களுக்கு ஏற்ப ஸந்நிதியில் சில திருப்பணிகளையும், எம்பெருமானது நித்ய கைங்கர்யம் ஸுகரமாக நடைபெற வேண்டிய முக்யமான பல சீர்திருத்தங்களையும் செய்திருக்கிறார். தகுந்த அதிகாரியான இந்த ஸ்வாமி, ஸ்ரீ ஆமருவியப்பனருளால் ஆயுராரோக்ய ஐச்வர்யாதிகளை அடைந்து கைங்கர்ய ஸ்ரீயுடன் விளங்கவேண்டுமென்று ஸ்ரீ சரண்யனை ஸபையார் ப்ரார்த்திக்கிறார்கள்.

ஸ்ரீ அஹோபில மடம் ஜீர்ணோத்தாரணம்.— தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபில மடம் ஜீர்ணோத்தாரணத்துக்காக ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநத்தின் பேரில் பல்லாயிர ரூபாய் செலவழித்துத் திருப்பணி நடந்து வருகிறது. கள்ளக்குரிச்சி ப்ரமுகர்களான ஸ்ரீமான்கள் டி. ஏ. தாதாசார்யர் முதலியோர் இங்கு விஜயம் செய்து, இத்திருப்பணியைக் கண்டு மகிழ்ந்து, 'இப்பணி முடிந்ததும் உபய வேதாந்த பாடசாலை ஒன்று இங்கு ஏற்படுத்த வேண்டும்' என்று தமது அபிப்ராயத்தை வெளியிட்டு, ஷை ஸம் ஸபையின் நடவடிக்கைகளையும் நூல்நிலயத்தையும் பார்வையிட்டு மகிழ்வெய்தினர்.

ஆத்ரேயம் கடாம்பி நரஸிம்ஹாசார்யர்

[ஸ்ரீ. வி. ஸ. ஸபா கார்யதர்சி]

*　　*　　*　　*

ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா—பம்பாய்.

ஷை ஸபையின் சார்பில் 13—8—49 முதல் 21—8—49 முடிய ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவம் 'ஸ்ரீராம்பாக்' ஹாலில் நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் திருவாராதனமும் திவ்யப்ரபந்த வேதபாராயணமும் முறையே நடந்தன. ஸ்ரீ பாகவத ஸப்தாஹ பாராயணமும் கிரமப்படி நடந்தது.

ஸ்ரீ. உப. S நரஸிம்மாசாரியர், B. A., B. L., ஸ்ரீ. உப. A. S. அய்யங்கார் B.A., L.L.B., ஸ்ரீ. உப. M. V. வரதாசாரியர். B.A., ஸ்ரீ. K. M. ஜவேரி, M.A., L.L.B., ஸ்ரீ. ஆசார்ய வெங்கடேச்வர தீக்ஷிதர், ஸ்ரீ பண்டிட் கோபாலாசாரியர், M.A., ஸ்ரீ. V. H. காமத் M.A.,L.L.B., வேதாந்தகேஸரி ஸ்ரீலக்ஷ்மண சாஸ்த்ரிகள், ஸ்ரீமதி நாராயணிபாய் கபாலி போன்ற பண்டித ரத்நங்களால் உபந்யாஸங்கள் நடைபெற்றன.

கீர்த்தன குலசேகர ஸ்ரீவிஜயராகவ பாகவத ரவர்களால் ப்ரஹ்லாத வாமந த்ருவ குசேல சரித்ரங்கள் ஸ்ரீ ருக்மணி கல்யாணம் முதலிய ஹரிகதா கால க்ஷேபங்களும், வாய்ப்பாட்டு வீணை குஜராத்திகர்பா கர்நாடக பரத நாட்யம் முதலிய கச்சேரிகளும் வெகு ஆச்சரியமாய் நடைபெற்றன. பக்தகோடிக ளனைவரும் திரள் திரளாய் வந்து உத்ஸவத்தில் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஈடுபட்டுப் பகவத் ப்ரஸாதத் தையும் பெற்று மகிழ்ந்தார்கள்.

21—8—49-ல் வேதப்ரபந்த சாத்துமறையும், பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்ட ஸ்வாமிக ளனைவருக்கும் ஸம்பாவனைகளும் செய்யப்பட்டு உத்ஸவம் இனிது பூர்த்தி யடைந்தது.

V. ஸ்ரீநிவாஸன்
காரியதர்சி.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதிஹு புரட்டாசி (கந்யா) மீ

17—9—49	1உ	சனிக்கிழமை	...	கந்யா க்ருஷ்ண தசமி திதி
18—9—49	2உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
22—9—49	6உ	வியாழக்கிழமை	...	ஸர்வ (மஹாலய) அமாவாஸ்யை
23—9—49	7உ	வெள்ளிக்கிழமை	...	நவராத்ரி பூஜாரம்பம்
24—9—49	8உ	சனிக்கிழமை	...	த்விதீயை-த்ருதீயை திதி த்வயம்
26—9—49	10உ	திங்கட்கிழமை	...	ஸ்ரீ. அ. மடம் 33-ம் பட்டம் பரந்தூர் ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
28—9—49	12உ	புதன்கிழமை	...	ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
30—9—49	14உ	வெள்ளிக்கிழமை	...	மஹாநவமி; ஸரஸ்வதி பூஜை
1-10—49	15உ	சனிக்கிழமை	...	விஜய தசமி
2-10—49	16உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி; ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
6-10—49	20உ	வியாழக்கிழமை	...	பௌர்ணமி திதி
9-10—49	23உ	ஞாயிற்றுக்கிமமை	...	த்ருதீயை திதி
10-10—49	24உ	திங்கட்கிழமை	...	அதிதி
11-10—49	25உ	செவ்வாய்க்கிழமை	...	சதுர்த்தி திதி
16-10—49	30உ	ஞாயிற்றுக்கிழமை	...	கந்யா க்ருஷ்ண நவமி திதி

சந்தாதாரர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஆபீஸ் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால், விலாஸத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிய விலாஸத்திற்கே சந்தாதாரர்கள் தங்கள் கடிதங்களை எழுதவும், தமது சந்தாத் தொகையை அனுப்பவும் ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஸம்பாதகர்.

விலாஸம் :—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

2, ஆதியப்ப முதலி தெரு,

புரசைவாக்கம் :: :: சென்னை - 7

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

—————:o:—————

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திவ்யாநுக்ரஹத்தையும் ஸ்ரீ அழகிய சிங்கரின் திவ்யாஜ்ஞையையும் முன்னிட்டு, அவ்வநுக்ரஹமும் ஆஜ்ஞையுமே பலமாகக் கொண்டு, பிறிதொரு ஶக்தியும் யோக்யதையும் இல்லாத அடியேன் இந்த ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகையின் ஸம்பாதக கைங்கர்யத்தை மேற்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் பரமபத ப்ராப்தி

இந்தப் பத்ரிகை தோன்றியது முதல் இதுவரை ஸம்பாதகராயிருந்து, சென்ற ஆனிமீ 32உ பரமபதித்த ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி போன்ற ஒரு மஹநீயர் வஹித்த பதவியை, அவரது தெளிந்த ஜ்ஞானமும் முதிர்ந்த வயதும் பரந்த அநுபவமும் இல்லாத அடியேன் எப்படி நிர்வஹிக்கப் போகிறேன் என்று எண்ணும்போது நெஞ்சு துணுக்கமடையத் தான் செய்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் ‘𑌮𑌶𑌕𑌂 𑌵𑌰 𑌉𑌵𑌾𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌹𑌂𑌸𑌸𑍍𑌯𑍇𑌵 𑌚 𑌵𑌾𑌯𑌸𑌃’ என்ற ஸ்ரீ பராசரபட்டர் வாக்யம் அடியேன் நினைவிற்கு வருகிறது. இருப்பினும் ஆசார்ய ஸார்வபௌமரது அருளும் ஆஜ்ஞையுமே எடுத்துக்கொண்ட வ்யாபாரத்தை இனிது நடத்தும் என்ற நம்பிக்கையால் அடியேன் இதில் அந்வயிக்கிறேன்.

இந்த ஸஞ்சிகை பெரும்பாலும் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமியினுடைய விஷயமாக இருக்கவேண்டுமென்பது ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம். இந்தப் பத்ரிகைக்கு இதுகாறும் ஸம்பாதகராக இருந்து இதை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்த ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமியினுடைய ஜ்ஞாபகச் சிந்நமாகவே இந்த ஸஞ்சிகை அமைவது மிகவும் பொருத்தமே. அந்த ஸ்வாமியிடம் தமக்குள்ள பக்திக்கும் விச்வாஸத்திற்கும் பஹுமானத்திற்கும் போக்குவீடாக அவருடைய கல்யாண குணங்களை வர்ணித்து அநேக ச்லோகங்களையும் பாசுரங்களையும் வ்யாஸங்களையும் பல பண்டிதர்களும்

உபாத்யாயர்களும் நமக்கு அனுப்பியுள்ளார்கள். அவை யாவும் மிக அழகாக வும் உருக்கமாகவும் காணப்படுகின்றன. அவைகள் அனைத்தையும் அவ்வாறே ப்ரசுரப்படுத்தவேண்டு மென்ற அவா ஒருபுற மிருப்பினும், இதா அஸௌ கர்யங்களை உத்தேசித்து அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே ப்ரசுரப் படுத்தியிருக்கிறோம். இங்கே ப்ரசுரிக்கப்படாத வ்யாஸங்கள் முதலியவைகள் விஷயத்தில், அவர்கள் அந்யதா க்ரஹணம் பண்ணிக்கொள்ளாதிருக்குமாறு அவர்களை ஸவிநயம் கேட்டுக் கொள்ளுகிறோம். அன்பர்கள் க்ஷமிக்கவேணும்.

அடியேனுக்கு ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமியினிடம் மிகவும் நெருங் கிய பழக்கம் ஏற்பட்டில்லாவிடினும், அடியேன் அறிந்தமட்டில் அந்த மஹானுடைய குணங்களைப் புகழ்ந்து இங்கே சில விஷயங்களாவது எழுதாம லிருக்க முடியவில்லை. ஆஸ்திக்யம் குறைந்துகொண்டுவரும் இந்நாளில், வைதிக மதத்தின் அடிப்படையான தத்வங்களையும் அதன் பெருமையையும் யாவரும் எளிதில் உணர்ந்து உஜ்ஜீவிக்கும்படி பல கார்யங்களை அந்த ஸ்வாமி தமது ஜீவிய காலம் முழுவதும் செய்துவந்தார். நல்ல அபிஜாத வம்ஶத்தில் அவதரித்து, ஸம்ஸ்க்ருதத்திலும் பாச்சாத்ய வித்யையிலும் நல்ல ப்ராவீண் யத்தை ஸம்பாதித்து, ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய நிதியாயும் ஶமதமாத் யாத்ம குணகராயும் எழுந்தருளியிருந்த ஸ்வாமியைப் பார்க்கும்போது நமது புராண ப்ரஸித்தர்களான மஹர்ஷிகளின் நினைவுதான் வரும்.

இந்த ஸ்வாமி ஆங்கில வித்யாசாலைகளில் ப்ரவசந கர்த்தாவாக எழுந் தருளியிருந்த காலத்தில், வித்யார்த்திகள் வித்யை மாத்ர மல்லாமல், ஶீலமும் ஆத்மகுணமும் அமையப்பெற்றவர்களாக ஆகும்படி அவர்களுக்குப் போதித்துவந்தார். அந்த ஸ்தாநத்திலிருந்து நிவ்ருத்தரான பிறகு நம் சிறுவர் களின் வித்யாப்யாஸ விஷயமாய் இந்த ஸ்வாமி அரும்பாடு பட்டுச் சென்னையில் த்யாகராயநகரில் ஒரு வித்யாஶாலையை ஆரம்பித்து, அது நாளடைவில் மேன் மேலும் வளர்ந்து ப்ரஸித்தமாய்ப் பல கிளைகளாகப் பிரிந்து நன்கு நடந்து வரு மாறு செய்தார். இவ்விஷயம் மாம்பலம் வாஸிகளும், மற்றும் யாவ ரும் அறிந்ததே. இந்த ஸ்வாமி கார்ய நிர்வாஹத்தில் மிக்க தீர்க்க த்ருஷ்டி யுடனும் உறுதிப்பாட்டுடனும் விடாமுயற்சியுடனும் நடந்து வந்ததால், கல்வி ஸ்தாபநங்களைச் சார்ந்த உபாத்யாயர்களும் சிப்பந்திகளும் இந்த ஸ்வாமியி னிடத்து மிக்க விச்வாஸமும் பஹுமாநமும் கொண்டவர்களாய் மிக்க ச்ரத்தை யுடன் தந்தம் பணிகளை த்ருப்திகரமாய்ச் செய்துவந்தார்கள்.

நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் தத்வார்த்தங்களை உலகினர் எளிதில் நன்குணர்ந்து உஜ்ஜீவிக்கும் வகையில் இந்த ஸ்வாமி வெகு காலம் வேதாந்த தீபிகையின் ஸம்பாதகராக இருந்து, அதை நல்ல முறையில் நடத்தி

வந்தார். வேதார்த்த ஸங்க்ரஹம், ஸ்தோத்ர ரத்நம், பஞ்சஸ்தவம் முதலிய க்ரந்தங்களுக்கு எளிய தமிழ் வ்யாக்யாநங்கள் எழுதி, அவற்றைத் தீபிகை வாயிலாக வெளியிட்டார். சில உபநிஷத்துக்களையும் பாஷ்யத்துடன் மொழி பெயர்த்து அச்சிடுவித்திருக்கிறார்.

வித்யா ப்ரவசந ப்ரத்யவேக்ஷணாதிகளிலும் பத்ரிகா நிர்வாஹத்திலும் ஸ்வாமிக்கு இருந்த அஸாதாரணமான ப்ராவீண்யத்தைக் கணிசித்து ஸ்ரீ அழகியசிங்கர் மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாஶாலையையும் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' பத்ரிகையையும் ஸ்வாமியைக் கொண்டே ஆரம்பித்துவைத்து, ஸ்வாமியிடம் அவைகளின் நிர்வாஹத்தையும் ஒப்புவித்து நிர்ப்பாராக எழுந்தருளியிருக்கும்படி இருந்தது. இன்னும் வெகுகாலம் இந்த ஸ்வாமி எழுந்தருளியிருந்து அந்தக் கைங்கர்யங்களை நடத்த முடியாமல் போனது நம்முடைய பாக்யக் குறைவென்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்த மஹானின் பிரிவால் ஏற்பட்ட ஶோகத்தையும் அநுதாபத்தையும், அவருடைய குமாரர்களுக்கும் பந்துக்களுக்கும் ஸுஹ்ருத்துக்களுக்கும் அந்தேவாஸிகளுக்கும் இதன் மூலம் ஸவிநயம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

* * * *

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' பத்ரிகை இன்னும் நிரேதிரே அபிவ்ருத்தியடைந்து ஸர்வோபஜீவ்யமா யிருக்கவேண்டு மென்பது ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ளம். அந்த அபிஸந்தியைப் பூர்த்தி செய்யும் வகையில் நமது பண்டிதர்கள் விஷய ப்ரதாநம் செய்ய முன்வர வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். நம் ஸமூஹத்தவர்களில் பலருக்கு இக்காலத்தில் ஶாஸ்த்ரத்திலும் ஸம்ப்ரதாயத்திலும் ச்ரத்தையும் பஹுமானமும் குன்றிவருகின்றன. நம் பண்டிதர்கள் தகுந்தபடி முயற்சி எடுத்துக்கொண்டால் அவர்களை அவ்வழியினின்றும் மாற்றி நல் வழியில் நடக்கச்செய்ய முடியுமென்றே தோன்றுகிறது. "நம் ஆசார்யர்கள் நமக்குக் காட்டிக்கொடுத்த தத்வ ஹித புருஷார்த்தங்கள் முதலியவைகளெல்லாம், தேஹயாத்ரைக்கு வேண்டிய லௌகிக வ்யாபாரங்கள் இல்லாமலும் கர்த்தவ்யாந்தரமில்லாமலும் இருப்பவர்களுக்குத்தான்; நமக்கு அவைகளில் அதிகாரமோ அந்வயமோ இல்லை: அவைகளால் நமக்கு ப்ரயோஜநமுமில்லை" என்று பலருக்கு இருக்கும் எண்ணம் மாறி அத்வேஷாபிமுக்யம் பிறந்து, பிறகு அவைகளில் ச்ரத்தையும் ருசியும் உண்டாகி, தத்வார்த்தங்களைத் தெரிந்துகொண்டு, 'நம் ஆசார்யர்கள் காட்டிக்கொடுத்த வழியில் எல்லோருக்கும் எக்காலத்திலும் இடமுண்டு; ஜீவநோபாயமாகக் கைக்கொண்ட வ்ருத்திக்கு விரோதமன்றியில் அதில் ப்ரவ்ருத்தித்து உஜ்ஜீவிக்கலாம்' என்ற எண்ணம்

உண்டாகி, ஆத்மோஜ்ஜீவநத்திற்கு வேண்டிய கார்யங்களில் அவர்கள் இறங்கும் வகையில் பல வ்யாஸங்களை வித்வான்கள் எழுத முன்வரவேண்டும். இன்னும், வேதங்கள் உபநிஷத்துகள் இதிஹாஸ புராணங்கள் இவைகளிலுள்ள ரஸமான ஆக்யாயிகைகளையும், நீதிகளையும், உபதேஶங்களையும் எல்லாருக்கும் ரஞ்ஜகமாயும் சுருக்கமாயும் எளிதாயுமுள்ள வ்யாஸங்களாக எழுதலாம். பண்டிதைகாஸ்வாத்யமான சாஸ்த்ர விஷயமான சர்ச்சைகளையும் விவாதத்திற்கும் வீண் சர்ச்சைகளுக்கும் இடமில்லாதவாறு அமைத்து அவச்யமான போது அவற்றை வெளியிடவும் விரும்புகிறோம். இவைகள் எல்லாவற்றையும் நன்கு கணிசித்து நமது வித்வான்கள் தக்கபடி விஷய ப்ரதாநம் செய்து நமது பத்ரிகையின் அபிவ்ருத்திக்கு நன்கு உதவவேண்டு மென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் பிரிவால் இந்தப் பத்ரிகையின் நிர்வாஹத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாகவும், அவற்றின் விஷயமாய் அரசாங்கத்திலிருந்து அநுமதி பெறுவதில் ஏற்பட்ட ஒரு வீண் தவிர்க்க முடியாத தாமதத்தாலும், சென்ற ஸஞ்சிகையையும் ணப்பம் இந்த ஸஞ்சிகையையும் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டு விட்டது. நமது வாசக மஹாஶயர்கள் க்ருபை செய்து இந்தத் தாமதத்தை க்ஷமிக்க வேண்டுகிறோம். இனித் தாமதம் ஏற்படாமல் யதாபூர்வம் ஸஞ்சிகை வெளிவரும்.